பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 05 வெள்ளிக்கிழமை (19.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :172

# புலிகளைத் தடைசெய்ய ஐரோப்பிய ஒன்றியம் முஸ்தீபு

## முடிவு இன்று எடுக்கப்படும் என ராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

பிரஸல்ஸ்,மே 19

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சேர்த்துக்கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தயாராகிவருவதாக ஒன்றியத்தின் இராஜதந்திரிகள் தெரிவித்திருக்கின்றனர். இது தொடர்பான இறுதி முடிவு இன்று எடுக்கப்படும் என்றும் அந்த இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன என்று 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

"இந்த விவகாரம் குறித்து அடிப்படைத் தீர்மானம் ஓரிரு நாள்களில் மேற்கொள்ளப்படும்" - என்று ஓர் இராஜதந்திரி தெரிவித்தார்.

ஆனால், இந்த முடிவு இன்று (வெள்ளிக்கிழமை) எடுக்கப்படும் என மற்றோர் இராஜதந்திரி புதனன்று தெரிவித்தார் என 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இன்று அத்தகைய முடிவெடுக்கப்பட்டாலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இருபத்தி

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலர் இந்தியாவுக்கு திடீர் விஜயம்

கொழும்பு மே 19

பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கிறார்.

அவரின் இந்தத் திடீர் விஜயத்திற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. ஆனாலும், இலங்கையில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை குறித்தும், அது தொடர்பில் இந்தியப் பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதுமே அவரின் இந்த விஜயத்தின் நோக்கமெனக் கூறப்படுகிறது. (க)

## தீவிரப்போருக்கே வழி செய்யும்: அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

லண்டன், மே 19

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக மேலும் சர்வதேசத் தடைகளை விதிக்க முற்படுவது ஏற்கனவே நலிவுற்று வலுவிழந்திருக்கும் இலங்கையின் அமைதி முயற்சிகளில் மேலும் மோசமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்; தீவிரப்போருக்கே அது வழிசெய்யும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாரத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை விதிக்கும் என்று செய்திகள் வெளியாகியிருப்பது குறித்து அவரிடம் நேற்றுக் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

"இராணுவத் தீர்விலேயே அதிக நாட்டம் கொண்டுள்ள தென்னிலங்கைக் கடும் போக்காளர்கள் அதற்கான முன்னேற்பாடாக தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகத்திலிருந்து அந்நியப்படுத்துவதை - தனிமைப்படுத்துவதை - அவசர அவசரமாகச் செய்விக்கத் துடியாய்த் துடிக்கின்றார்கள்" - என்று பாலசிங்கம் சுட்டிக்காட்டினார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தடை இப்போதைக்கு வராதாம்

கொழும்பு,மே 19

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத் தடை முடிவு இன்று எட்டப்படும் என ஊடகங்களில் நேற்றுப் பரபரப்பான தகவல்கள், செய்திகள் வெளியானாலும் -

அத்தகைய முடிவு இவ்வளவு விரைவாக எட்டப்படுவதற்கோ, நடைமுறைப் படுத்தப்படுவதற்கோ சாத்தியமே இல்லை என்று வேறு இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுக் கொழும்பில் அடித்துக் கூறின.

"ஐரோப்பிய ஒன்றியத்தில் 25 நாடுகள். அவை அனைத்தும் ஏகமனதாகவே இத்தகைய ஒரு முடிவை எடுக்க வேண்டும். அமெரிக்க அழுத்தத்துக்காகவோ அல்லது பிரிவு நிலைப்பாடுகளுக்காகவோ இவ்வளவு விரைவில் அத்தகைய இணக்கப்பாடு இந்த விடயத்தில் வந்துவிடும் என்று நம்புவதற்கு இடமில்லை.

"மேலும் இந்தக் கட்டத்தில் புலிகளைத் தடை செய்யும் திட்டத்துக்கு இரு நோர்ட்டிக் நாடுகள் ஆதரவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

"இந்தச் சூழ்நிலையில் புலிகளுக்கு எதிரான தடை விதிப்புக்குப் பூர்வீக நடவடிக்கைகள் கூட இப்போதைக்குப் பூர்த்தியாகும் நிலைமை இல்லை.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு நடவடிக்கை தொடரும் எனத் தெரிவிப்பு

கொழும்பு மே.19

இலங்கையில் தாங்கள் ஆற்றிவரும் பணிகளில் இருந்து உடனடியாக வெளியேறும் நோக்கம் ஏதுமில்லையென்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் நேற்று தெரிவித்திருக்கின்றனர்.

பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளருக்கு பேட்டி ஒன்றை வழங்கியிருக்கும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்வ் ஹென்றிக்ஸன், ஒப்பந்தத்தை விட போர் ஒன்றைக் கண் காணிக்க வேண்டிய சூழ்நிலையே தங்களுக்கு இருந்தாலும் தாங்கள் தங்களது பணிகளில் இருந்து உடனடியாக விலகப்போவதில்லையென்றும் கூறியிருக்கிறார்.

வன்முறைகள் அதிகரித்துவரும் இப்போதைய சூழ்நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் இலங்கையில் தங்கியிருக்க வேண்டியதன் அவசியத்தை உல்வ் ஹென்றிக்ஸன் வலியுறுத்தினார்.

"போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் துப்பாக்கிச் சூடு

கொக்குவில் தலையாளிப் பகுதியில் உள்ள இராணுவத்தினரின் மினி முகாம் மீது நேற்றுக்காலை 7 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனையடுத்துப் படையினர் அப்பகுதியில் தேடுதல் நடத்தினர். ஆயினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் விமானம் வன்னியில் பறந்தது

கொழும்பு, மே 19

நீண்ட காலத்தின் பின்னர் விடுதலைப் புலிகளின் சிறிய ரக விமானமொன்று கிளிநொச்சி - முல்லைத்தீவு வான்பரப்பில் நேற்று

(8ஆம் பக்கம் பார்க்க)

## எம் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் இல்லாவிடில் வன்னிக்கு அனுப்புங்கள்!

### அல்லைப்பிட்டி மக்கள் அரச அதிபரிடம் உருக்கமான கோரிக்கை

அல்லைப்பிட்டி, மே 19

"தற்போது எமக்குப் பாதுகாப்பு இல்லை. எப்போது என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் தவிக்கின்றோம். இங்கு எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். இல்லையேல் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் எம்மை வன்னிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்." - இவ்வாறு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர் அல்லைப்பிட்டி மக்கள்.

கடந்த சனிக்கிழமை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட 9 பேர் அல்லைப்பிட்டியிலும் வேலணை வங்களாவடி மற்றும் புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் 4 பேரும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து அச்சம் காரணமாக அல்லைப்பிட்டி மக்கள் அங்குள்ள பிலிப்பு நேரியார் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் அவர்கள் அங்கு வசிக்கின்றனர்.

அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாகவும் அவர்களுக்குத் தேவை

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சி வேட்பாளர் அம்பாறையில் சுட்டுக்கொலை!

### அவரது ஆதரவாளரும் உயிரிழந்தார்

நிந்தவூர், மே 19

நாளை நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாவிதன்வெளி பிரதேச சபைக்கு தமிழரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் இளைஞர் ஒருவரும் அவரது ஆதரவாளரான மற்றோர் இளைஞரும் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது இனந்தெரியாத குழு ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தமிழரசுக் கட்சி வேட்பாளரான பா.கமல்ராஜ் (வயது - 27) என்ற வேட்பாளரும், அவரது ஆதரவாளரான சமுர்த்தி உத்தியோகத்தர் பாலசுந்தரம் சுரேஷ்வரன் (வயது - 32) என்ற இளைஞருமே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அம்பாறை 11ஆம் கொலனியில் - சென்ரல் காம்ப் பொலீஸ் சோதனைச் சாவடிக்கு அருகில் வைத்து இந்த இருவரும் சுட்டுக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தீவகப் படுகொலைகள் விசாரணை: சாட்சிகளுக்குப் பாதுகாப்பளிக்க பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம்,மே.19

தீவகப் படுகொலைகள் குறித்த வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார்.

தீவகப் படுகொலைகள் குறித்த நீதிவான் விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி முன்னிலையில் இடம்பெற்று வருகின்றன.

அல்லைப்பிட்டி மற்றும் புளியங்கூடலில் இடம்பெற்ற கொலைகள் குறித்த விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

இதன் போதே மேற்கண்ட உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



தீவகப் படுகொலைகளையடுத்து அல்லைப்பிட்டி தேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ள மக்களை நேற்று சந்தித்த அரச அதிபர் அங்கு உரையாற்றுவதையும் அங்கு சென்றிருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தஞ்சம் அடைந்துள்ள மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)




தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டித்து நேற்று கிளிநொச்சியில் கூட்டுறவுப் பணியாளர்கள் நடத்திய பேரணியையும் பேரணி முடிவில் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# தேவாலயப் பகுதியில் விரைவில் கடற்படையினரின் காவலரண்!

## பாதுகாப்புக் கருதி விரைவில் நடவடிக்கை

அல்லைப்பிட்டி, மே 19

அல்லைப்பிட்டியில் 9 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து அப்பிரதேச மக்கள் தஞ்சமடைந்துள்ள தேவாலயப் பகுதியில் விரைவில் காவலரண் ஒன்றை நிறுவி பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக தீவகக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காவலரண் அமைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

''நாம் அல்லைப்பிட்டி பிரதான வீதியிலேயே பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்றோம். உள்ளே மக்கள் செறிந்து வாழும் இடங்களிற்குள் செல்வதில்லை. இதனால் தற்போது அங்கும் காவலரண்கள் அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.'' - என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, அச்சம் காரணமாகப் பிலிப்புநேரியார் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்களில் சுமார் 10 வரையான குடும்பங்கள் நேற்றுக் காலையில் தமது பொருள்களுடன் அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் குடும்பங்கள் லொறிகளில் வன்னி நோக்கிச் சென்றதாகவும் அங்குள்ளவர்கள் கூறினர். (ம)

# கொலைகளை நிறுத்தக்கோரி கூட்டுறவாளர் நேற்று பேரணி

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்படும் படுகொலைகள், தாக்குதல்கள் போன்றவற்றைக் கண்டித்துக் கூட்டுறவுப் பணியாளர்கள் பேரணி ஒன்றை நேற்று கிளிநொச்சியில் நடத் தினர்.

நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் கிளிநொச்சி அலுவலகம் வரை தொடர்ந்தது.

பேரணி முடிவில் மகஜர் ஒன்று கூட்டுறவு ஒன்றியத் தலைவர் இ.கணபதிப்பிள்ளையால் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு விலாச மிடப்பட்ட கடிதமே கையளிக்கப்பட்டது. (420)

# ஈழத் தமிழர்கள் மூன்று பேர் தமிழகத்தில் நேற்றுக் கைது!

போலி கடன் அட்டையப் பயன்படுத்தி தமிழ்நாட்டு வங்கிகளில் லட்சக்கணக்கான பணத்தைச் சூறையாடிய - லண்டனை வதிவிடமாகக்கொண்ட - மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்களை தமிழக பொலிஸார் நேற்றுக்கைது செய்துள்ளனர்.

ராஜசீலன், ரமேஷ், ராஜன் என்ற இந்த மூன்று இளைஞர்களிடமிருந்தும் இலங்கைப் பெறுமதியின்படி 13 லட்சம் ரூபாவும், 156 போலி கடன் அட்டைகளும், ஆறு கைத்தொலைபேசிகளும், காரொன்றும் மீட்கப்பட்டன எனத் தமிழக மத்திய புலனாய்வுப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பாலு தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

சென்.ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலையில் தரம் 5 வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சகல பெற்றோர்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

## உயர்தரப் பரீட்சையில் தோற்றுவோருக்கு

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான முதல்கட்ட வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டன.

இதேவேளை, பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் இன்று காலை 10 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தொலைபேசி இலக்கம் 222 9725 அல்லது 222 2449 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு விவரங்களை அறியமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யோக சுவாமிகளின் ஜயந்தி தின நிகழ்வு

யோக சுவாமிகளின் ஜயந்தி தின நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது. விசேட சொற்பொழிவு மற்றும் மகேஸ்வர பூசை என்பன இடம்பெறும்.

# கடற் படையினருக்கும் ஈ.பி.டி.பிக்கும் தீவகக் கொலைகளில் சம்பந்தமில்லை

## பி.பி.ஸி. செவ்வியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்.தீவகத்தில் - அல்லைப் பிட்டி, வேலணைப் பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் 13 பேர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும், ஈ.பி.டி.பிக்கும் தொடர்பு எதுவும் கிடையாது. இதில் கடற்படையினரின் சம்பந்தம்கூட இருப்பதாகத் தெரியவில்லை.

கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள்கூட ஊடுருவித் தாக்குதல் நடத்திய புலிகள்தான் இங்கும் ஊடுருவித் தாக்கியிருப்பர்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

தீவுப் பகுதியில் கடற்படையினர் மற்றும் ஈ.பி.டி.பியினர் முன்னிலையிலேயே 13 பொதுமக்களும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்திருக்கின்றமைதொடர்பாக நேற்றுமுன்தினமிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

ஈ.பி.டி.பிக்கும் தீவகக்கொலைகளுக்கும் சம்பந்தம் இல்லை. அரச படைகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனவா என்பதுகூடச் சந்தேகம்தான்என்றார் டக்ளஸ்.

தீவுப்பகுதி கடற்படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கின்றது. அப்படியிருக்கும்போது கடற்படையினருக்குத் தெரியாமல் எப்படி இந்தச்சம்பவம் நடந்திருக்கக் கூடும் என்று பி.பி.ஸி. செய்தியாளர் கேட்டதற்கு,

''இலங்கை இராணுவத் தலைமையகத்திற்குள்ளேயே தற்கொலைக் குண்டுதாரி செல்லமுடியும் என்றால் தீவுப் பகுதிக்குள் போகமுடியாதென்று இல்லைத்தானே. கொழும்பில் எவ்வளவு பாதுகாப்பான இடங்களுக்குள்கூட புலிகள் ஊடுருவித் தாக்கியிருக்கிறார்கள். அதுவரலாறு'' என்று அமைச்சர் டக்ளஸ் பதிலளித்தார்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் காணாமல் போவது தொடர்பாக அவரிடம் கேட்டபோது,

'' இருக்கலாம். ஆனால், 1997 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஆயிரம் பேர் வரையில் காணாமல்போயினர் என்று கூறப்பட்டது. எனினும், அவற்றில் உறுதிப்படுத்தப்பட்டது 300பேர்தான். எஞ்சிய தொகையினர் போலியானவர்களாக இருக்கலாம். அதுபோன்ற நிலைமைதான் இப்போது என்றார் டக்ளஸ். (க)

# சுன்னாகத்தில் இருந்து கிளிநொச்சிக்கு மின் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுனதினம் அலரி மாளிகையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பான பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் மின்சாரத்தை விருத்தி செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி மின்சக்தி மற்றும் எரிபொருள்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ணவுக்கு ஜனாதிபதி ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார் என்று கூறப்பட்டது.

இதற்கமைய அமைச்சரவைக் கூட்டத்தின்போது வடக்கின் மின்சார அபிவிருத்தி தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் செனவிரட்ண தாக்கல் செய்தார். இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதன்படி சுன்னாகத்திலுள்ள மின் நிலையத்திலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் -

யாழ்ப்பாணத்தில் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு இணைப்புகளை வழங்குவதுடன், அங்கு தடையின்றி 24 மணிநேரமும் மின்சாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் கூறப்பட்டது.

இதற்கென பெருந்தொகை நிதியில் பாரிய வே[illegible] ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

# உடன்படிக்கையில் புலிகளுக்கு கடல் உரிமையும் கொடுத்ீர்களா?

## ரணிலிடம் விளக்கம் கேட்கிறார் வீரவன்ஸ!

கொழும்பு,மே19

கடல், வான் இறைமை தமக்கும் உள்ளதென்று யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விளக்கம் அளிக்கவேண்டும் என்று கோரி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கின்றார்.

2002ஆம் அண்டு அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்படிக்கை [illegible] போது அதில் புலிகளுக்கு கடல் உரிமை வழங்கப்பட்டதா என்று அப்போது புலிகளுடன் மறுதரப்பாக - அரச தரப்பாக - இருந்த ரணில் விக்கிரமசிங்க ஜே.வி.பியினராகிய எமக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று விமல் வீரவன்ஸ தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கு சமனான முறையில் அறிக்கைகளை வெளியிட்டுவரும் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் என்ற வகையில் நாட்டுக்குத் துரோகம் செய்வதைத்தவிர வேறு எதனையும் செய்யவில்லை என்று தமது கடிதத்தில் சுட்டிக்காட்டிய வீரவன்ஸ, கடந்த ஜெனிவாப் பேச்சின்போது ஒட்டுப்படைகளைக் களைவதற்கு ஒப்புக்கொண்டமைக்கு அமைவாக, அரசு செயற்படவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் தெரிவித்திருந்தார். அது குறித்தும் தமக்கு விளக்கம் தரவேண்டும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# தவறு இழைக்கும் சர்வதேசம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், தமது தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் சேர்ப்பதா என்பது குறித்து இருபத்தைந்து முக்கிய ஐரோப்பிய நாடுகளை அங்கத்துவமாகக் கொண்ட ஐரோப்பிய யூனியன் இன்று முடிவு ஒன்றை எடுக்கவிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கையில் 'அரச பயங்கரவாதத்துக்கு' எதிராகத் திமிறிக்கொண்டு நிற்கும் தமிழர் தரப்பை அச்சுறுத்தி - மிரட்டி - பயமுறுத்தி - பணிய வைப்பதற்கும், அடங்கச் செய்வதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் பயன்படுத்தக் கூடிய கடைசி ஆயுதம் இதுதான். இந்த மோசமான - இறுதியான - ஆயுதத்தை தமிழர் தரப்புக்கு எதிராகப் பிரயோகிக்க முன்னர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இந்த நடவடிக்கையின் பெறுபேறுகளை ஒரு தடவை சீர்தூக்கிப் பார்ப்பது பொருத்தமானது; அவசியமானது.

இருபத்தியைந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இது வரை பிரிட்டன் மட்டுமே தனது தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகளைச் சேர்த்திருக்கிறது. கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் பிரிட்டனும் ஏனைய இருபத்தினான்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் புலிகளைத் தடை செய்யும் நிலைமை வருமானால் அதன் விளைவு என்னாகும்?

* தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடந்த இரண்டரை தசாப்த கால சரித்திரத்தை உற்று நோக்குபவர்கள் ஒரு விடயத்தை இலகுவாகப் புரிந்து கொள்வர். 'அச்சுறுத்தி அடி பணிய வைத்தல்' என்ற தந்திரோபாயம் புலிகளின் தலைமையிடம் எந்தச் சமயத்திலுமே சரிப்பட்டு வராது என்பதுதான் அது. மிஞ்சினால் கெஞ்சுபவர்கள் அல்லர் புலிகள். மிஞ்சினால் அதனையும் மிஞ்சியே பழக்கப்பட்டவர்கள் அவர்கள். எனவே, ஐரோப்பிய ஒன்றியத் தடை என்ற அச்சுறுத்தல் அத்தடையை விதிக்கும் நாடுகளின் எதிர்பார்ப்புக்கு மாறான - முரணான விளைவுகளையே தரும்.

* சர்வதேச சமூகத்தின் பங்களிப்பில் - நீதியான கண்காணிப்பில் - சமாதான வழிமுறை மூலம் தங்களுக்கு (தமிழர்களுக்கு) நியாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே புலிகள் இப்போதைய யுத்தநிறுத்தத்துக்கும், அமைதி முயற்சிகளுக்கும், சமாதானப் பேச்சுகளுக்கும் முன்வந்தனர்; யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து பேணி அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்பளிக்கின்றனர். ஆனால், இருபத்தியைந்து நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியமும் புலிகளைத் தடை செய்தால், சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையே புலிகளுக்குத் தளர்ந்து - தகர்ந்து - போய்விடும். இனிமேலும் சர்வதேச சமூகத்தையோ, உலகையோ நம்பி இருப்பதில் பயனில்லை என்ற தீர்மானத்துக்கு வரும் புலிகள் மீண்டும் யுத்த வழிமுறையை - தங்களின் இலக்கை அடைவதற்கான பாதையாக ஆயுத வழித் தடத்தை - நாடும் நிலைமை உருவாகும். இது ஐரோப்பிய யூனியன் இவ்விடயத்தில் தனது நடவடிக்கை மூலம் எதிர்பார்த்த உத்தேச விளைவுக்கு மாறான பெறுபேறையே உருவாக்கும்.

* இத்தகைய தடை விதிப்பு, ஏற்கனவே தமிழர்களுக்கு எதிராக யுத்த முனைப்பில் தீவிரமாகியிருக்கும் தென்னிலங்கையின் பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுத் தலைமைக்கு மேலும் யுத்த உஷார் ஏற்றி, உசுப்பிவிடும் ஊக்குவிப்பாகவே அமையும் என்பது தெளிவு. பெரும்பான்மையினரான பேரினவாதிகளை தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைப் போரைத் தீவிரப்படுத்த வழிப்படுத்தும் சமிக்ஞையாகவே இது அமையும்.

* அது மட்டுமல்ல. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் லட்சக் கணக்கில் குடியேறி, அந்தந்த நாடுகளின் விசுவாசம் மிக்க பிரஜைகளாக வாழும் ஈழத் தமிழர்களின் விருப்பத்துக்கும், அபிலாஷைகளுக்கும் மாறான நடவடிக்கையாகவும் இந்தத் தடை விதிப்பு அமையும். தமது நாட்டில் சுறுசுறுப்பாக உழைத்து நாட்டுக்கும் தமக்கும் பயனுள்ள வகையில் வாழும் பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்களின் நெஞ்சை நோகடிக்கும் விதத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இந்த நடவடிக்கையை இவ்வளவு அவசரப்பட்டு எடுப்பதில் அர்த்தம் ஏதுமில்லை.

* மேலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - ஏற்கனவே அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, இந்தியா போன்றவை விதித்த தடை போன்ற ஒன்றைப் புலிகளுக்கு விதித்தால் - இந்த நாடுகள் இப்போது இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளில் ஒன்றான புலிகளை நேரடியாகவோ அல்லது உத்தியோக ரீதியிலோ தொடர்புகொள்ள முடியாமல், இலங்கை நிலைவரம் குறித்து வெளியிலிருந்து தம்பாட்டில் அறிக்கை விடுவதுபோல - ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் எதிர்காலத்தில் வெளியில் இருந்து அறிக்கை வெளியிடுவதோடு அமைய வேண்டியது தான்.

* இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் கண்காணிப்பாளர்கள் நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து போன்ற 'நோர்ட்டிக்' நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடை விதிக்குமானால் அந்த ஒன்றியத்தில் இடம்பெறும் சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் புலிகளோடு தொடர்புபட்டு, உறவாடி, கலந்து பேசி கண்காணிப்புப் பணியில் ஈடுபட முடியாத நிலைமையும் ஏற்படும்.

இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேச தடைவிதிப்புத் திட்டம் தற்போதைய சமாதான முயற்சிகளை முற்றாக முடக்கி, நாட்டை முழு யுத்தத்துக்குள் மூழ்கடிக்கச் செய்யும் என்பது புலனாகின்றது.

இலங்கையிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்களின் ஆத்மார்த்தமான ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் வரை இத்தகைய உத்தேசத் தடைகள் புலிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. மாறாக, மதியுரைஞர் பாலசிங்கம் சுட்டிக் காட்டுவதுபோல அமைதி முயற்சிகளில் எதிர்மறைவான விளைவுகளை ஏற்படுத்தி, தீவிரப் போருக்கு வழிசமைப்பதாகவே அவை அமையும்.

சர்வதேச சமூகத்துக்கு இந்த உண்மை - யதார்த்தம் - சமர்ப்பணம்.

# அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தாருங்கள் அன்றேல் விடுதலைப் போரை அங்கீகரியுங்கள்.

## ஐ.நா. செயலாளரிடம் பொது அமைப்புகள் வேண்டுகோள்

கிளிநொச்சி,மே19

- அரசியல் அந்தஸ்தின் அடிப்படையில் தமிழர்கள் தீர்வினைப் பெறுவதற்கு உதவுங்கள். அன்றேல் எமது சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை ஆதரியுங்கள்.

இவ்வாறு ஐ.நாவின் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அல்லைப்பிட்டியில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டித்து நேற்று கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவாளர்களினால் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கான மகஜர் ஒன்று கிளிநொச்சியில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத் தலைமை அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா அரசினால் தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அரச பயங்கரவாத கோரத்தாண்டவம் அதிகரித்து இலங்கைத்தீவில் கடந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு சர்வதேச கண்காணிப்பாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே எமது மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப்படுகிறார்கள்.

தீவகத்தின் - அல்லைப்பிட்டி, புளியங்கூடல் யாழ்ப்பாணம் - அச்சுவேலி, மந்துவில், நெல்லியடி, திருகோணமலை - சம்பூர், வாகரை எனத் தமிழர் தாயகம் எங்கும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். இவை யாவும் ஜெனீவா பேச்சுவார்த்தை உடன்பாட்டிற்குப் பின்னரான சம்பவங்கள் ஆகும். உயிர்ப்படுகொலைகள் தவிர முப்படைகளும் பெருவாரியான உயிர்க்கொலையுடன் சொத்தழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. தமிழர்கள் இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் கொண்டிருக்கிறார்கள்.

சர்வதேச சமூகத்தின் உயரிய கரிசனைக்கும் பாதுகாப்புக்கும் உரியவர்களான குழந்தைகளும் பெண்களுமே அதிகளவு கொல்லப்பட்டு வருகிறார்கள். இவைகள் தொடர்பாக கொதித்தெழவேண்டிய சர்வதேச அமைப்புகள் மௌனம் சாதிப்பது எம்மை வேதனையும் விரக்தியும் அடையவைத்துள்ளது. சர்வதேசத்தின் நியாயப்பாடுகள் தொடர்பில் ஐயுறவு ஏற்படுத்தியுள்ளது.

இணைத் தலைமை நாடுகளும் சர்வதேச சமூகமும் இங்கு இருக்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் இலங்கைத்தீவின் சமாதான நடவடிக்கை தொடர்பில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டிய கடப்பாடு உடையவர்களாம். ஆனால், தங்களது கருத்துக்களும் அணுகுமுறைகளும் பக்கச்சார்பாக அமைந்துள்ளது. சிறிலங்கா அரசும் அதன் படைகளும் புரியும் அடாவடித்தனங்களை தாங்கள் கண்டுகொள்ளத் தவறுகிறீர்கள். இதனால் தங்கள் கண்காணிப்பிலேயே கொலைகள், அழிப்புகள், வன்முறைகள், கற்பழிப்புகள் என அரச பயங்கரவாதம் நடந்தேறுவதைச் சுட்டிக்காட்டுகின்றோம். இவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆகவே, தங்கள் சமூகம் இலங்கைத் தீவின் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பில் உலக சமூகத்தையும் வழங்கப்பட்டுள்ள அதியுயர் அரசியல் அந்தஸ்தின் அடிப்படையில் தீர்வினை வழங்குவதற்கான சமாதான முன்னெடுப்புகளை முன்னகர்த்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தாங்கள் எமது வேண்டுகோள்களை நிறைவேற்றுவது சாத்தியமற்ற தாயின் எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். - என்றுள்ளது.

(352-420)

## அரசசார்பற்ற நிறுவனப் பணிகள் குறித்துக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே19

குடாநாட்டில் தற்போதைய சூழ்நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிகள் குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இணையத்தில் இணையத் தலைவர் ஏ.கே.சிவசுப்பிரமணியம் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டத்தின் தற்போதைய சூழ்நிலைகள் குறித்து ஆராயப்படவுள்ளதால் இணையத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வீதியில் மீட்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் மரணம்!

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு தலையில் படுகாயமடைந்த நிலையில் வயோதிபர் ஒருவர் மீட்கப்பட்டார். அவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சீனிக்குட்டி ராஜசேகரம் (வயது 75) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் வீதியோரத்தில் நேற்றுமுன் தினம் இரவு 7 மணியளவில் மீட்கப்பட்டார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தார்.

வீதியால் சென்ற வாகனம் ஒன்று மோதியதாலோ அல்லது வயோதிபர் தவறி வீழ்ந்ததாலோ அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

# குடாநாட்டில் பணிப்புறக்கணிப்பு தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 19

யாழ். குடாநாட்டில் அரச பணிகளை முடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறும் என்று தமிழ்த் தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

''அரச படைகளால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் படுகொலைகளைக் கண்டித்து மேற்கொள்ளப்படும் இந்தப் போராட்டம் தொடர்ந்து இடம்பெறும்.'' - என்று தொழிற்சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''படையினர் ஆயுதமுனையில் எவ்வித அச்சுறுத்தலை மேற்கொண்டாலும் அரசுக்கெதிராக இந்த மௌன யுத்தம் தொடரும். எனவே அந்தந்தத் தொழிற்சங்கங்கள் இதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

''படையினரின் தொலைபேசி மிரட்டல்களுக்கு அஞ்சி தங்களால் இயன்ற இந்த மௌனப் போராட்டத்தைக் குழப்பி விடாமல் பார்த்துக்கொள்ளுமாறு ஒவ்வொரு அரச அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கின்றோம்.'' - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7)

## சோதனைச் சாவடி விஸ்தரிப்பால் மருத்துவமனை அபிவிருத்தி முடக்கம்

குருநகர்,மே19

குருநகர் கடற்கரை வீதியில் சவக்காலைச் சந்தியில் அமைந்துள்ள படையினரின் சோதனைச்சாவடி மேலும் சிறிது தூரத்துக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கற்கள், மணல் மூடைகள் அடுக்கி பலப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு அண்மையில் கண்காணிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இச்சோதனைச்சாவடிக்கு அருகில் குருநகர் அரசினர் மகப்பேற்றுமனை அமைந்துள்ளது. குருநகர் பகுதி, மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியாக உள்ளதுடன் இந்த அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கும் இச்சோதனைச் சாவடி இடையூறாக அமைந்துள்ளதாக குருநகர் பொதுமக்கள் தெரிவித்தனர்.

குருநகர் அரசினர் மகப்பேற்று மனையாக இது பல காலம் இயங்கி வந்தது. இம்மனையில் சேதமடைந்த கட்டடங்கள் மற்றும் மருத்துவ மாது தங்கியிருப்பதற்கான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் சோதனைச் சாவடியில் இராணுவத்தினரின் பிரசன்னத்தினால் இரவு நேரத்தில் எவரும் தங்குவதில்லை. எனவே கர்ப்பிணித் தாய்மார்கள் இங்கு தங்கி பிரசவம் நடைபெற ஏற்பாடு செய்வதுடன் இந்த இராணுவச் சோதனைச் சாவடியின் விஸ்தரிப்பையும் தடுத்து நிறுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என குருநகர் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (51)

## உதயவாக்கு

ஓர் இறாத்தல் போதனையை விட ஓர் அவுன்ஸ் தாய்மை மேலானது.

- ஸ்பானிய பழமொழி

## நாளை

வைகாசி - 05

சனிக்கிழமை

20.05.2006

திதி : அட்டமி

பின்னிரவு : 01.16

நட்சத்திரம் : அவிட்டம்

பிற்பகல் : 04.48

சுபநேரம் : 02.52 - 04.22

[illegible] : 08.52 - 10.22

## ஊரெழுவில் கிளைமோர் மீட்பு

யாழ்ப்பாணம், மே19

ஊரெழுவில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கிளைமோர் குண்டு ஒன்று மற்றும் கிரனேட்டுக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் தோட்டம் ஒன்றில் இருந்து 10 கிலோ நிறையுடைய கிளைமோர் குண்டு ஒன்றும் எஸ்.எவ்.ஜி.80 ரக கிரனேட்டுக்களும் வெடிக்க வைக்கும் கருவியும் வயர் ரோல் ஒன்றும் மீட்கப்பட்டன என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட கிளைமோர் குண்டு பின்னர் இராணுவத்தினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது என்றும் கூறப்பட்டது.

(ம)

## சமுர்த்தி நிவாரண முத்திரைக்கு பழுதடைந்த பருப்பு விநியோகம்

சமுர்த்தி நிவாரண முத்திரைக்குப் பழுதடைந்த பாவனைக்குதவாத பருப்பு வழங்கப்படுதாகச் சமுர்த்திப் பயனாளிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர் சமுர்த்திப் பயனாளிகளுக்குத் தற்போது இரு மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இதன்போதே மேற்படி பழுதடைந்த பருப்பு வழங்கப்படுதாகக் கூறப்படுகின்றது.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்படும் பருப்பே பழுதடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அம்பலம் கந்தையா சுந்தரம் A.K.S.

(பிரபல வர்த்தகர், A.K.S. மோட்டோர்ஸ், A.K.S. ரான்ஸ்போட், A.K.S. அரிசி ஆலை, சாவகச்சேரி, A.K.S. கமம், 5ஆம் வாய்க்கால், பரந்தன்)

மலர்வு
20.06.1924

உதிர்வு
15.05.2005

திதி: ஸப்தமி 19.05.2006

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எமையெல்லாம்
இத்தரணியில் வாழ வழிவகுத்த எமதன்பு ஐயாவே!
எம்மிடம் இருந்து காலனும் உமைப்பிரித்து
ஆண்டு ஒன்று உருண்டோடியதோ நெஞ்சமோ
மறக்க முடியவில்லை ஐயா! நினைவோ அழியவில்லை ஐயா!
அன்பையும் அறிவையும் பாசத்தையும் பொழிந்த நீங்கள் எம்மை
எல்லாம் நல்வழிப்படுத்தி எம் உயர்வுக்கு எம்முடன்
இருப்பீர்கள் என நினைத்தோம் ஏமாற்றிவிட்டு ஒரு நொடியில்
எமைப் பிரிந்தது ஏன் ஐயா? உங்கள் நினைவலைகளைச்
சுமந்து நிற்கின்றோம்!

"லட்சுமி பவனம்"
கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மகன்மார், மகள்,
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை

## இதனால் நோயாளர்கள் பெரும் சிரமம்

பரந்தன், மே19

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவதால் அங்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையின் சுற்றுப்புற வேலிகள் அழிந்த நிலையில் உள்ளதால் வைத்தியசாலைக்குள் கட்டுப்பாடற்ற முறையில் பார்வையாளர்கள் நோயாளர்களைப் பார்வையிட வந்து செல்வதோடு, கட்டாக்காலி கால்நடைகளும் இவ்வைத்தியசாலைக்குள் நுழைகின்றன.

இங்கு ஆண் நோயாளர்களுக்கான விடுதி தற்காலிகமாக ஒரு தகரக் கொட்டகையில் இயங்கிவருகின்றது. தற்போது நிலவும் கடும் வெப்ப காரணமாக தகரக் கொட்டகையின் கீழ் உள்ள நோயாளர்கள் மற்றும் நோயாளர்களைப் பராமரிப்போர், பார்வையாளர்கள், தாதியர்கள், வைத்தியர்கள் எனப்பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வைத்தியசாலைக்கான குழாய் மூலம் நீர் வழங்கும் இடங்களில் கழிவு நீர்தேங்கிக் காணப்படுகின்றது. இதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவும் நிலையும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் விடுதிகளில் உள்ள நோயாளர்கள் குளிக்கும் இடம் மறைப்புக்கள் ஏதும் இல்லாத நிலையில் திறந்தவெளியாகக் காணப்படுவதாகவும் இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதாகவும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(352)

## சமகால அரசியல் கருத்தரங்கு

புளியங்குளம், மே19

சமகால அரசியல் நிலை தொடர்பான கருத்தரங்கு கடந்த 14 ஆம் திகதி புளியங்குளத்தில் நடைபெற்றது. வவுனியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் க.ஞானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா சமகால அரசியல் நிலை தொடர்பாக சிறப்புரையாற்றினார். இதன் பின்னர் பலர் தம்மை போராட்டத்தில் இணைத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இந் நிகழ்வில் புளியங்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இந்திரன் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

(355)

# மன்னாகண்டல் கிராமத்தின் வீதியோரங்களில் கழிவுகள்

## போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமம்

புதுக்குடியிருப்பு, மே19

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட மன்னாகண்டல் கிராமத்தின் வீதியோரங்களில் கழிவுகள் கொட்டப்படுவதால் அந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கழிவகற்றும் இடம் மன்னாகண்டல் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கே பொலித்தீன், கண்ணாடி, பிளாஸ்ரிக், உக்கும் கழிவுகள் என வகைப்படுத்தப்பட்டு கழிவகற்றல் நடைபெறுகின்றது.

அதற்கு மாறாக சிலர் வீதியோரங்களில் தமது கழிவுகளை கொண்டுவந்து கொட்டுவதால் பெரும் அசௌரியங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் கழிவகற்றும் நடவடிக்கைக்கு பெரும் இடையூறாக உள்ளது.

எனவே, இவற்றினைத் தவிர்க்குமாறும் இனிவரும் காலங்களில் இவ்வாறு கழிவுகளைக் கொட்டுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச சபையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் பரவலாக குப்பைத்தொட்டிகள் வைக்கப்பட்டு அதில் குப்பைகளைப் போடுமாறு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவற்றினை நாளாந்தம் பிரதேச சபையினர் அகற்றி வருகின்றனர்.

(353)

## மன்னார் மாவட்டத்தில் நடமாடும் மருத்துவ சேவை

பரந்தன், மே19

மன்னார் மாவட்டத்தில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நடமாடும் மருத் துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின் றன.

திங்கள்முதல் வெள்ளிவரை வட்டக்கண்டல், பரப்புக் கடந்தான், கூராய், சீது விநாயகர்குளம், மூன்றாம்பிட்டி, கணேசபுரம், இலுப்பைக்கடவை ஆகிய கிராமங்களில் சுமார் இரண்டு மாதங்களாக நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நடமாடும் மருத்துவ சேவை மூலம் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

(352)

# முல்லை. மாவட்ட பெருவிளையாட்டு போட்டி முடிவுகள் வெளியாகின

மல்லாவி, மே19

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**கரபந்தாட்டம்**

**15 வயதின் கீழ் - ஆண்கள்**

கலைமகள் வித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.

**17 வயதின் கீழ் - ஆண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மல்லாவி மத்திய கல்லூரி, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.

**19 வயதின் கீழ் - ஆண்கள்**

கலைமகள் வித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**15 வயதின் கீழ் - பெண்கள்**

வித்தியானந்தாக் கல்லூரி, கலைமகள் வித்தியாலயம்.

**17 வயதின் கீழ் - பெண்கள்**

கலைமகள் வித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி, பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்.

**19 வயதின் கீழ் - பெண்கள்**

பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி, கலைமகள் வித்தியாலயம்.

**உதைபந்தாட்டம்**

**17 வயதின் கீழ் - ஆண்கள்**

கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, முல்லைத்தீவு மகாவித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

**19 வயதின் கீழ் - ஆண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை, முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை.

**வலைப்பந்தாட்டம்**

**19 வயதின் கீழ் - பெண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை, பாலிநகர் மகாவித்தியாலயம்,

**17 வயதின் கீழ் - பெண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, பாலிநகர் மகாவித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.

**19 வயதின் கீழ் - பெண்கள்**

பாலிநகர் மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வித்தியானந்தாக் கல்லூரி.

(322)


## 41ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் இராசநாயகம் ருக்குமணி

தோற்றம் 1936-07-25 மறைவு 2006-04-09

தாயாக வாழ்ந்து தளராமல் எனைக்காத்து
பாசம் என்னும் கடலினிலே எனை வளர்த்த
அத்தையே!
உம் பாசத்தை என்னால் மறக்கமுடியவில்லை
ஆத்மா சாந்தியடைய கடவுளை வேண்டுகிறேன்.

தவித்துக்கொண்டிருக்கும்:
மருமக்கள்
கஜிந்திரன் - சுமித்திரா.

உடுவில் தெற்கு,
புதுமடம், மானிப்பாய். (50027) (24-32-11-14)



## 29ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 07 - 01 - 1931



விண்ணில் 21 - 04 - 2006

அமரர் பொன்னு தம்பிராசா
(டேவிற் ராஜசிங்கம்)

எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் வாழ்நாள்
இருக்கும் வரை
உங்கள் நினைவு எங்களுடன் இருக்கும்.

*எமது குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்தி கேட்டு வெளிநாட்டிலும் உள்நாட்டிலுமிருந்து நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர்வளையம் வைத்தவர்கள் மற்றும் பல வழிகளிலும் பேருதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள். அத்துடன், இன்று (19.05.2006) வெள்ளிக்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்தி திருப்பலி மு.ப.11 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை (O.L.R) ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*இல.21, ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.* (50279)(32-11-14)

குடும்பத்தினர்


## உள்ளூராட்சி திணைக்கள கட்டடப் பணி

யாழ்ப்பாணம், மே19

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள இரண்டாவது மாடிக்கட்டட வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

நீர்ப் திட்டத்தின் கீழ் இக்கட்டட வேலைகள் இடம்பெறுகின்றன.

கடந்த வருடம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை முதலாவது மாடிக் கட்டடத்தை திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(185)

## விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் சைவநெறித் தேர்வுக்கான விண்ணப்ப முடிவுதிகதி அடுத்த மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என சபையின் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார்.


O/L
Day Class
ஆரம்பமாகிவிட்டது
C.C.A
சுன்னாகம்
A/L 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பமாகிவிட்டன
(50262)



## IMMEDIATE VACANCY - Jaffna

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of Organizations from 12 European countries that supports a board portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGO's Arbeiter-Samariter-Bund (ASB), Norwegian People's Aid (NPA), and Swiss Labour Assistance (SAH). Applications are requested from experienced person for the following positions:

**Technical Officer (1)**

Reporting to the Project Manager the TO is responsible for monitoring construction projects. The ideal candidate should have at least five years experience in a technical capacity, be self- motivated and independent, with excellent communication skills. Fluency in English, Tamil & Sinhala essential

*Duties include*

- Quality control checks on contractors work - ensuring timeframes and progress
- Compilation of weekly reports and timely submission to the Project Manager
- Overall guidance for construction projects

**Administrator (1)**

Reporting to the Project Manager this position is central to the project & will require an IT proficient candidate with a high standard of professionalism, outstanding organizational & communication skills with the ability to liaise with all relevant authorities, partners, stakeholders & communities. Fluent English, Tamil & Sinhala requird.

*Duties will include:*

- Administration, basic accounting, finance and / or book keeping
- Maintenance of files, database
- Office/staff management

**Driver/translator (1)**

- Proven 3-5 years driving experience
- Fluent command spoken Sinhala, Tamil & English
- Knowledge of geography in place of work
- Valid license

**Period of Contract**

All positions are for 7 months (extendable): Extension will be considered based on performance and the requirement at the time

Cover letter, curriculum vitae and references should be addressed to:
Mr.Christin Justin, Solidar, No.156, Jaffna Road, Paranthan
or by email: christiyustin@gmail.com
Deadline for application is Monday 22nd of May 2006

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தொலைபேசி நிலையத்திற்கு தேவையான அனைத்துப் பொருள்களும் இரண்டு தொலைபேசி இணைப்புக்களும் , போட்டோப் பிரதி இயந்திரம், பக்ஸ் இயந்திரம், கவரிடும் இயந்திரம், கொம்பியூட்டர் பிரிண்டர் மற்றும் CBZமோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06 கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
T.P.No. 222 2298, 0776917030 (50289)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 22.05.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49297)

## போட்டிகள் பிற்போடப்பட்டன

கரணவாய் மூத்தி கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக்கழகம் திருவள்ளுவர் விழாவை முன்னிட்டு வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களிடையே எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் நடத்தவிருந்த போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

போட்டிகள் நடைபெறும் திகதிகள் குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் என்று கழக இணைப்பாளர் தெரிவித்தார்.

## ஆங்கில மருந்து விற்பனையாளர் தேவை

ஆங்கில மருந்து விற்பனையில் முன் அனுபவம் வாய்ந்தவர்கள் (பெண்கள்) உடன் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
**வசந்தம் பார்மஸி**
456, ஆஸ்பத்திரி வீதி,
(50287) யாழ்ப்பாணம். (21)

# டோகா - கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

| தொழில்கள் | தொகை |
| --- | --- |
| மேசன் | 35 |
| தச்சுவேலைசெய்வோர் | 35 |
| கம்பி கட்டுபவர் (ஸ்ரீல்பெக்சர்) | 30 |
| பைப்பொருத்துபவர்கள் (பிளம்பர்) | 25 |
| மின்சார வேலையாள்கள் (எலக்ரிசன்) | 25 |
| கிளீனர் | 10 |
| கிளீனர் மேற்பார்வையாளர் | 03 |

குறிப்பு:- முற்பணம் அறவிடப்படமாட்டாது. விசா கையிருப்பிப்பில் உண்டு. 20 நாள்களில் பயணம். கிளீனர் மேற்பார்வையாளர்கள் வெளிநாடு ஒன்றில் வேலைசெய்த அனு பவம் தேவை. ஏனையோருக்கு வேலை அனுபவம் இருந்தால் மட்டும் போதும். கொண்டு வரவேண்டிய ஆவணங்கள்.

* பாஸ்போட்
* பாஸ்போட் அளவு புகைப்படம் - 05

தொடர்பு:- **மைக்கல்** T.p.: 0777279813
(50265)(26.16.14)



உ
சித்திரவேலவர் துணை
வடகோவை
ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோயில் - கோப்பாய்

# அறிவித்தல்
## கும்பாபிஷேக பாலஸ்தாபனம்

**சித்திர வேலவர் மெய்யன்பர்களே!**

ஆலயத்தின் கும்பாபிஷேக பாலஸ்தாபன நிகழ்வு எம்பெருமானது திருவருளினால் நிகழும் விய வருடம் வைகாசித் திங்கள் 23ஆம் நாள் (01.06.2006) வியாழக்கிழமை காலை 6.54 மணி முதல் 8.53 மணிவரையுள்ள பூச நட்சத்திரமும் மிதுன லக்கினமும் கூடிய சுபவேளையில் நடைபெறுவதற்குத் திருவருள் கூடியுள்ளது.

இப்பாலஸ்தாபன நிகழ்வு பற்றிய அறிவித்தலை உபயகாரர்கள், அடியவர்கள், பெருமக்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றேம். மிக உயர்ந்த பேறுடைய இவ்வரிய கைங்கரியத்திற்கு வேண்டிய உதவிகளையும் ஒத்தாசைகளையும் அனைவரையும் வழங்கி எம்பெருமானது திருவருளைப் பெறுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

(50291)
(24.21.14.45) **ஆலய தர்ம பரிபாலனசபை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆலய குரு **சிவம் ஐயா**

அவர்களுக்கு விய வருடம் சித்திரைத் திங்கள் 28ஆம் நாள் (11.05.2006) வியாழக்கிழமை குருப்பட்டமளிப்பு நடைபெற்றுள்ளது. குருப்பட்டம் பெற்ற எங்கள் ஆலய குருவைப் பாராட்டுவதுடன் அவர்களது சமயப்பணி தொடர எல்லாம் வல்ல அம்பாளை இறைஞ்சுகின்றோம்.

தர்மகர்த்தாக்கள்
கலட்டி கண்ணகை அம்மன் கோயில், கோப்பாய் தெற்கு, கோப்பாய் (சி-49307) சிவநாபூஷணி அம்மன் கோயில், கரந்தன், நீர்வேலி.

# மரண அறிவித்தல்கள்

## சீனிக்குட்டி இராசசேகரம்
(இளைப்பாறிய அதிபர்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிக்குட்டி இராச சேகரம் 17.05.2006 புதன்கிழமை நள்ளிரவு அகால மரண மானார்.

அன்னார் இராசமுத்துவின் அன்புக் கணவரும் தேவகி (பிரதிப் பணிப்பாளர் RDA, கொழும்பு), சாந்தினி (குழந்தை வைத்திய நிபுணர் மட்டக்களப்பு பொது வைத்தியசாலை), கோமதி (உதவி நூலகர் யாழ்.மருத்துவபீடம்), அசோகன் (நிதி உதவியாளர், பிரதேச செயலகம், பளை), கௌசலா ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினசோதி (முகாமைப் பணிப்பாளர் Gestetner), கணேசன் (உள மருத்துவ நிபுணர் மட்டக்களப்பு பொது வைத்தியசாலை), முருகதாஸ் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அராலி), பத்மினி (அஞ்சல் அலுவலகம் சாவகச்சேரி), பவானந்தன் (பணிப்பாளர் IDAC) ஆகியோரின் பாசமிகு மாமனும் சங்கரி, சங்கீதனன், டிலன் ரமணன், வேணுஷா, பிரதாபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.06) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சந்திரபுரம், (50292)
மட்டுவில் வடக்கு, (21.14.45)
சாவகச்சேரி.
தகவல்: **அசோகன்** (மகன்).

## தம்பிமுத்து கனகலிங்கம்
(நயினாதீவு)



நயினாதீவு வடக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து கனகலிங்கம் அவர்கள் 16.05.2006 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிமுத்து சீதேவிப்பிள்ளையின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- சின்னம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தனரஞ்சினி மற்றும் சிவபாலனி, சிவாகரன், சீவகலாசினி, சிவத்திரன், காலஞ்சென்ற ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வநாதன், வசந்தினி, அருள்செல்வன், சிவகாமரூப சுந்தரி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்றவர்களான பாலசிங்கம், சுந்தரம்பிள்ளை மற்றும் சதாசிவம், காலஞ்சென்ற இரகுப்பிள்ளை, மற்றும் மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோன்மணி, காலஞ்சென்ற கற்பகம் மற்றும் தையல்நாயகி (திலகவதி), லீலாவதி, இராசநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி மகாலிங்கம் புவனேஸ்வரி, திருமதி உருத்திரலிங்கம் யோகேஸ்வரி ஆகியோரின் அத்தானும், மெரானி, நெராமி, முரான், அனா, அபிராமி, ஹென்றி மனோவா, சுஷாந் ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 21.05.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

159/5, பலாலிவீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (50286)(21.14.45)
தகவல்: **க.சிவத்திரன்** (மகன்).
T.P.: 021 4590241

**solidar**
INGO Consortium

## SUBJECT: INVITATION FOR BIDS

### 'Supply of Doors & Windows for 100 Tsunami Affected Houses in Chempianpattu North or Vathirayan, Vadamarachi East'

**Solidar an International Non Govermental Organisations Consortium consisting of (ASB, NPA & SAH) is inviting you to submit sealed bids for the supply of wooden doors and windows for the Villages Reconsruction and Development Project for Tsunami affected populations in Chempianpattu North or Vathirayan.**

Registered contractors are invited to bid on sets of doors and windows for 100 houses based on their capacity.

contractors can collect the bidding dossiers from:

Solidar / ASB Construction Office,
160 Mile Post,
Farm Point,
A-9 Road, Paranthan,
Killinochchi.

Tel: 021 228 5147

Closing date for distribution of bidding documents is May 30th, 2006.

Bidding Dossier Fee is 1000 LKR.

(C/49312) (24)

## சுத்திகரிப்பு தொழிலாளர் நியமனம்

வலி.தெற்கு,மே19

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு கடந்த 15ஆம் திகதி முதல் இரண்டு பெண் அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(135)

# FASHION BEAUTY CORNER

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற உள்ள சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கேக் ஐசிங்கில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் கொழும்பு எசன்ஸ் ஹவுஸ் உரிமையாளர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. அத்துடன், பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. எனவே, சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள உள்ளோர் தமது சிறிய அளவிலான புகைப்படத்துடன் (Passport size) சமூகமளிக்கவும்.

14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி.49287) (39.32.15.45)

நிர்வாகி,
*திருமதி ஜெயவாணி கஜேந்திரன்*
*(அழகுக்கலை நிபுணர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 09 - 11 - 1920



ஆண்டவனின் அடியில் 09 - 05 - 1988

## அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணர் (பத்தர்)

திதி:19-05-2006

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!

புனிதரான உங்களின் - இந் நினைவு நாளில் - நாங்கள்
கண்ணீர் சொரிந்து வணங்குகின்றோம்.

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு,
(மணியகாரன் வீதி, தெல்லிப்பழை).

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(50204)(26.14.17)

# மரண அறிவித்தல்கள்

## துரைராஜா செல்லம்மா



சங்கானையைப் பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது இருபாலை வீதி, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா செல்லம்மா அவர்கள் 17.05.2006 புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும் பாலசுந்தரம் (கனடா), குணபாலசிங்கம், பத்மநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் கமலாதேவி, பவளராணி, விமலாதேவி, வன்மலாதேவி, கருணாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற இராசநாயகம், மகேந்திரன் மற்றும் ஜெயலக்சுமி, சிவதேவராணி, ரஞ்சனா, ஜெயஒலிபவன், கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(50293) (24.26.14.17)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## பெஞ்சமின் அந்தோனிப்பிள்ளை



இல.55, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.143/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெஞ்சமின் அந்தோனிப்பிள்ளை அவர்கள் 16.05.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும் றெக்ஸ் மகேந்திரன், காலஞ்சென்ற எட்மன், மேசி (பபி), டியூக் (மனோகரன்), எமிலி (சாந்தா), ரஞ்சன், ராஜன், நிக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.05.2006) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இல. 143/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(50304)(24.26.17.14)

தகவல்:
அ.றெக்ஸ் மகேந்திரன் (மகன்).

## இராஜேந்திரம் சபாரத்தினம்



யாழ்.வைமன் வீதியைச் சேர்ந்த இராஜேந்திரம் சபாரத்தினம் அவர்கள் 17.05.2006 புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரம் - கனகம்மா தம்பதியரின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் ராதிகா (U.K.), பிரியதர்ஷனி, அனுஷா (ஞானக்குழந்தை இல்ல ஆசிரியை), தனூர்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனனின் (U.K.) அன்பு மாமனும் ஜதுர்ஷ்குட்டியின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நடராஜா (Accountan), வில்வராஜா (T.A), Dr.கனகரட்ணம் (U.K.), செல்வரட்ணம் (U.K.), ஜெயரட்ணம் (U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரூபவதி, பற்றிசியா, புஷ்பா (U.K.), சாந்தி (U.K.), விக்கினபிரபா (U.K.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.05.2006) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக்கிரியைகளின் பின் 12/3, வைமன் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்திலிருந்து கோம்பயன் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/3, வைமன் வீதி,
நல்லூர். (50303)(26.17.14)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜாக்சனின்
கிங் - கொங் King Kong
தங்கத் தமிழ் மொழியில்
[பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை]
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய்
பயமாய் இருக்கிறது
10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்


## பொருளியற் கல்லூரியின்
# கண்ணீர்ப் பூக்கள்



எமது நிறுவன
A/L 2007 மாணவியும்
ஸ்ரான்லிக் கல்லூரி அதிபரின்
அன்பு மகளுமாகிய
**மாணிக்கம்
லாவண்யா**

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன், அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,
பொருளியற்கல்லூரி,யாழ்ப்பாணம். (50307)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா செல்வராசா

(ஓய்வுபெற்ற ஊழியர்,
வட பிராந்திய போக்குவரத்துச் சபை)

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வராசா (ஓய்வுபெற்ற ஊழியர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை ) அவர்கள் 17.05.2006 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-பாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் -நாகம்மா தம்பதியரின் மருமகனும் சறோஜினி தேவியின் கணவரும் வஜனி, ஸ்ரீஸ்காந்தன், தயாஸ்காந்தன் (வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்), சிவாஜினி (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் யதீஸ்வரானந்தம் (சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்), பன்னீர்ச்செல்வன் (யாழ். மாநகரசபை), தவராணி ஆகியோரின் மாமனும் தக்சிகா, தரணிகா, வைஷ்ணவி, புருசோத், கஜானா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் கனகலிங்கம், தவமணி, கண்ணுத்துரை, காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் பூமணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (50302) (24.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி
## கணபதிப்பிள்ளை சௌந்தரம்

(நயினாதீவு)



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை சௌந்தரம் நேற்று (18.05.2006) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible]
(மகன்)
[illegible]
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (50310)

## தரம் - 05 பொஸ்கோ மாணவர்களின்
## பெற்றோர்களிற்கான ஒன்றுகூடல்

நாளை (20-05-2006) சனிக்கிழமை
முற்பகல்10 மணிக்கு
பாடசாலை மண்டபத்தில் ஒன்று கூடும் படி
கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி/49314)(26.17.14)

-அதிபர்.

# 31 ஆம் நாள் நினைவு



## அமரர் மாதவர் சின்னத்தம்பி
## சுந்தரம்பிள்ளை

நிஜமாக 15-04-1921

நினைவாக 19-04-2006

வாழ்வில் உழைத்தெம்மை
வல்ல பயிர் ஆக்கியும் - எம்
வேரெனவே இருந்திர் - எந்த
வேளையும் நாம் மறவோமே!

காரைக்கால்,
இணுவில் கிழக்கு. (50299)(32.26.14.17)

- குடும்பத்தினர்.




[illegible] இல. 1710

17.05.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

02 46 53 70 02

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201162092 இலிருந்து 201177139

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 66,50,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 66,50,950/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 32 | 5,000/- | 1,60,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 397 | 1,000/- | 3,97,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,296 | 500/- | 6,48,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,406 | 40/- | 7,76,240/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,460 | 20/- | 3,69,200/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,76,966 | 10/- | 27,69,660/- |
| மொத்தம் | | | 61,20,100/- |
| [illegible] | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| [illegible] மொத்த பரிசுத் தொகை | 3,16,563 | | 68,20,100/- |

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 73,91,000/-

| | |
|---|---|
| [illegible] | 201166252-6-14 |
| [illegible] | 201175153-6-56 |
| [illegible] | 201163953-6-63 |
| [illegible] | 201172072-1-54 |
| [illegible] | 201168318-7-23 |

அபிவிருத்தி லொத்தர் சபை


# இறைவனடி இணைந்த இரஞ்சிதத்தின்
# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16 - 05 - 1940



மறைவு 20 - 04 - 2006

மனைவிளக்கு

## அமரர் மேரி மக்டலீன் பியாற்றிஸ் இரஞ்சிதம் ஆரோக்கியதாசன்

LATE Mrs.MARY MAGDALENE BEATRICCE RANJITHAM ST.ROCHE

அவர்களுக்கு

*இரக்கம் நிறைந்த இயேசுவே!
அமரர் இரஞ்சிதம் ஆரோக்கியதாசனின் ஆன்மா
சமாதான ஒளியில் ஒளிர்வதாக
"நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து
நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர்..." [புனிதலூக் 6:45]*

*இவரின் ஆன்ம சாந்திக்காக நாளை (20-05-2006) சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.சுண்டுக்குழி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். எம் துணைவியாரின் இறுதி யாத்திரையில் பங்குபற்றிச் செபித்து, பல வழிகளில் உதவி புரிந்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும், எம் இதயம் கனிந்த நன்றிகள்.*

*"யார் அறிவார் சாநாளும் வாழ் நாளும்"*

சமாதானம்

இல.60, கோயில் வீதி,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.
(சி/49308)(26.14.17)

திரு.F.S.R. துரை. ஆரோக்கியதாசன்,
(முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை),
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரப் போருக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இவ்வாறு மேலும் தடைகளை விதிப்பது -

பேச்சுமூலமான தீர்வை நாடுவோரை மௌனிக்க வைத்து, விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் தோற்கடிக்கச் செய்வதில் ஆர்வமாக இருக்கும் - இப்போதைய அரசில் இடம் பெற்றிருப்போர் உட்பட - தென்னிலங்கைக் கடும்போக்குச் சக்திகளை - ஊக்குவிப்பதாகவே இருக்கும்'' - என்றும் பாலசிங்கம் கூறினார்.

''சர்வதேச சமூகம் புலிகளை எவ்வளவு அதிகமாகத் தனிமைப்படுத்துகிறதோ அவ்வளவு அதிகமாக கடும்போக்குத் தனிவழிப் பாதையை நாடிப் புலிகளை அது வழிப்படுத்தும்'' - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

களத்தில் மோசமடைந்து வரும் யதார்த்த நிலைவரங்களுக்கு ஏற்பவே புலிகளின் நடவடிக்கைகளும் கொள்கைகளும் அமைய முடியுமே தவிர, சர்வதேச சமூகத்தின் விருப்புகளுக்கு அமைவாக மட்டுமல்ல - என்றும் அவர் சொன்னார்.

கடந்த இரண்டு வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு நிழல் யுத்தம் ஒன்றை நடத்தி வருவதைச் சுட்டிக்காட்டிய அன்ரன் பாலசிங்கம், ''இந்த நிழல் யுத்தம் இப்போது மென் தீவிர யுத்தமாக மாற்றமடைந்து வருகின்றது.'' - என்றும் கூறினரர்.

''சர்வதேச சமூகத்தின் ஆதரவினால் - விசேடமாக புலிகளுக்கு எதிரான மேலும் தடைகளால் - உற்சாகமடையும் சிங்கள கடும்போக்குச் சக்திகள், யுத்தத்தின் மூலம் புலிகளை அழிக்கலாம் என்ற தங்களின் எதிர்பார்ப்பின் அடிப்படையில் மேலும் வன்முறைகளைத் தூண்டி, யுத்தத்தை வெடிக்க வைக்க நடவடிக்கை எடுக்கும்.'' - என்று குறிப்பிட்ட பாலசிங்கம், ''அப்படி நடந்தால் விடுதலைப் புலிகளும் அதை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பலவந்தப்படுத்தப்படுவார்கள்.'' - என்றார்

''எனவே இது (ஐரோப்பிய ஒன்றியத் தடை), சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு உதவப் போவதில்லை. மாறாக, யுத்தத்துக்கான சூழலைத் தீவிரப்படுத்தி, சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் பொறியில் சிக்கியுள்ள தமிழ் பொது மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தவே வழி செய்யப்போகின்றது.'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.

## புலிகளின் விமானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் மாலை பறந்துள்ளது என் கொழும்புச் செய்திகள் சில தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் இந்த விமானம் இரணைமடு விமான ஓடு தளத்திலிருந்து மேலெழுந்ததாகவும் இதனைத் தமது 'ராடர்' திரைகளில் அவதானிக்க முடிந்ததாகவும் படைத்தரப்பினரை மேற்கோள் காட்டி இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டது.

கடந்த 11 ஆம் திகதி புலிகளி னால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிலைக்கேணி கடல் தாக்குதலை அடுத்து அரச விமானப் படைகள் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை ஒன்றை வன்னிப் பகுதியில் மேற்கொண்டன. இதன் போது, புலிகளின் இரணைமடு விமானத் தளம் அழிக்கப்பட்டதாக விமானப் படையினர் தெரிவித்தனர்.

அத்தகைய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதைக் காட்டும் முகமாகவே விடுதலைப் புலிகளின் இந்த 'வான் பறப்பு' நடவடிக்கை இடம் பெற்றது என அந்த இணை யத் தளம் மேலும் தெரிவித்தது. (க)

## எம் பாதுகாப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான வசதிகளைச் செய்து கொடுப்பது தொடர்பாகவும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் அரச சார்பற்ற தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய - குழுவினர் நேற்று நேரில் அங்கு சென்று ஆராய்ந்தனர். மக்களுடன் விரிவாகக் கலந்துரையாடினர்.

பிற்பகல் 3 மணியளவில் ஆரம்ப மான இந்தக் கூட்டம், சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்றது. தமக்கிருக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் மக்கள் அதிகாரிகளுக்கு எடுத்து விளக்கினர். உடனடியாகத் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அவர்கள் அனைவரும் கோரினர். அவ்வாறு செய்ய முடியாத நிலையில் தம்மை வன்னிக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்று விடுமாறும் கோரினர்.

மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அதிகாரிகள் மற்றும் அரசசார்பற்ற பிரதிநிதிகள் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகளை உடன் வழங்குவதாக உறுதியளித்தனர். அதேநேரம் பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்வது குறித்து அவர்களே முடிவு செய்யவேண்டும் என்றும் கூறினர்.

அதேசமயத்தில் தமது பாதுகாப்புக் கருதி எவராவது அல்லைப்பிட்டியில் இருந்து வெளியேற விரும்பினால் அவர்களை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்றும் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், யுனிசெவ், ஜி.ரி.இசற், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, வன்முறையற்ற சமாதானப் படை, வேல்ட் விஷன் ஆகிய அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வேலணைப் பிரதேச செயலரும் கலந்துகொண்டனர். (ம)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து அங்கத்துவ் நாடுகளினாலும் பிறிதொரு தினத்தில் அம்முடிவு அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்யும் பட்சத்தில் அந்தந்த நாடுகளிலுள்ள புலிகளின் அலுவலகங்கள், பிரசார மையங்கள் போன்றவை மூடப்படுவதோடு புலிகளின் சொத்துகளும் முடக்கப்படும் நிலைமை ஏற்படும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 25 நாடுகளில் ஏற்கனவே பிரிட்டன் மட்டும் தனது தனியான சட்டம் மூலம் புலிகள் இயக்கத்தைத் தனது நாட்டில் தடை செய்திருப்பது தெரிந்ததே.

இனி, ஐரோப்பிய ஒன்றியத் தடை வருமானால் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, சுவீடன், ஒஸ்ரியா போன்ற ஈழத் தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளில் புலிகளின் நடவடிக்கைகள் முற்றாக முடக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவிற்ஸர்லாந்து, நோர்வே போன்றவை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் வரவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. (க)

## சாட்சிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது நீதிவான் கூறியதாவது:-

இந்த விசாரணைகளில் சம்பந்தப்பட்ட சாட்சிகள் சுதந்திரமாக சாட்சியமளிக்க அச்சமடைந்துள்ளனர். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கடந்த 15ஆம் திகதி பிரதிப் பொலீஸ் மா அதிபரிடம் கேட்டிருந்தேன். அத்தகைய பாதுகாப்பு எதுவும் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்த வழக்கின் சாட்சிகளாக உள்ளவர்கள் உட்பட தேவாலயத்தில் தங்கி உள்ளவர்களுக்கும் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருபவர்களுக்கும் உடனடியாக பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு பிறப்பித்த உத்தரவில் நீதிவான் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற விசாரணைகளில் அல்லைப்பிட்டி கொலைகள் தொடர்பாக இருவரும், புளியங்கூடல் கொலைகள் தொடர்பாக ஒருவரும் சாட்சியமளித்தனர்.

அல்லைப்பிட்டி கொலைகள் குறித்த விசாரணையில் -

'நேவி உடுப்புடன் வந்த மூவரே துப்பாக்கிகளால் சுட்டனர். சுடவேண்டாம் என்று மன்றாடியபோது அவர்களில் ஒருவர் 'தள்ளிநில்' என்று கூறிச் சுட்டார். தமிழில் பேசியவரை அடையாளம் தெரியாது. மற்றய இருவரையும் அடையாளம் காட்ட முடியும்.

என்று சாட்சிகள் குறிப்பிட்டனர்.

நேற்றைய விசாரணைகளின்போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் வன்முறையற்ற சமாதான அணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

தீவகப் படுகொலைச் சம்பவங்களில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றவர்களிடமிருந்து ஊர்காவற்றுறை நீதிவான் இன்று வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய உள்ளார்.

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறித்துக் கொண்டால் மீண்டும் பேச்சு நடத்துவதற்காகன ஓர் அரங்கம் இருக்காது. எமது குழு இங்கு இருக்கும் வரை எமது கண்காணிப்புப் பணியும் தொடரும்'' - என்றார் உல்வ் ஹென்றிக்ஸன்.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செயல்பட ஆரம்பித்த பின்னர் இலங்கை முதற்தடவையாக இப்போது சிரமமான காலகட்டத்தை எதிர் நோக்கியுள்ளதாக உல்வ் ஹென்றிக்ஸன் மேலும் தெரிவித்துள்ளார்.

## தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''புலிகளுக்கு எதிராகத் தடை விதிக்கப்பட வேண்டும் என்ற ஆவலில் இருக்கும் சில தரப்புகளின் தந்திரோபாயப் பிரசாரமாகக் கூட இந்தத் தடை விதிப்புப் பற்றிய பரபரப்புச் செய்திகள் அமையலாம்.'' - என்று அந்த இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பஸ் நிலையக் கொலை; எல்லாளன் படை உரிமை கோரியது

கொழும்பு,மே 19

யாழ்.பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட செல்வசிறி சிறிதாஸ் (வயது 35) என்பவரின் கொலைக்கு யாழ்.மாவட்ட எல்லாளன் படை உரிமை கோரியுள்ளதாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

பல தடவைகள் எச்சரிக்கை விடப்பட்டும் எதிரிகளுடனும் எதிரிப் புலனாய்வாளர்களுடனும் இணைந்து செயற்பட்டதற்காகவே இத் தண்டனை வழங்கப்பட்டதென எல்லாளன் படை தெரிவித்ததாக அச் செய்திகளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் ஆணின் சடலம்

வவுனியா, தரணிக்குளம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலத்தை நேற்று அதிகாலை வவுனியாப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் - தனிப்பட்ட தகராறு காரணமாக இவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் -

பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (க)

## இரு நாள்களில் தமிழகத்துக்கு 101 அகதிகள்

இலங்கையில் போர் அச்சம் ஏற்பட்டிருப்பதையடுத்து கடந்த இரு தினங்களுள் மாத்திரம் 22 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

திருகோணமலை, பள்ளத்தோட்டம், திருக்கடலூர், சிறிமாபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்களே இவ்வாறு அகதிகளாக வந்திருக்கின்றனர். நான்கு தொகுதிகளாகப் படகுகளில் பயணித்த இவர்கள் அரிச்சல்முனை, இராமேஸ்வரம், சேரன்கோட்டை, சங்குமால் ஆகிய கடற்கரைகளை அடைந்தனர். திருகோணமலைப் பகுதியில் சிங்களவர்கள், தமிழர்களை வெட்டிக் கொல்வது, இளைஞர்கள் இராணுவத்தினரால் துன்புறுத்தப்படுவது போன்ற கொடுமைகள் இடம்பெற்று வருகின்றன என்று அவர்கள் தமிழகப் பொலீஸாரிடம் தெரிவித்தனர்.

## மரண அறிவித்தல்கள்

### இராசையா முத்துலிங்கம்

**(இளைப்பாறிய நில அளவையியலாளர்)**

கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா முத்துலிங்கம் நேற்று வியாழக்கிழமை (18.05.2006) காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கே.கே.எஸ்.வீதி,* (50313) தகவல்:
*கோண்டாவில் மேற்கு,கோண்டாவில்.* **செ.மனோன்மணி (சகோதரி)**

### நாகலிங்கம் தங்கலட்சுமி



திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தங்கலட்சுமி அவர்கள் நேற்று (18.05.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, வல்லிபுரம், பத்மநாதன் (Police Inspector) மற்றும் செல்லம்மா (கனடா) ஆகியோரின் சகோதரியும் நடராஜா பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), மகாலட்சுமி, கௌரி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் பவானி ராணி, K.T. இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) இராசரத்தினம் ஆகியோரின் மாமியாரும் வனிதா, மகேந்திரதாஸ் (கனடா), பரிமளகாந்தி (ஜேர்மனி), சுமதி (ஆசிரியர்), எழில்தாஸ் (கனடா), நிசாந்தன் (கனடா), சுசிதரன் (லண்டன்), நிரோஜி, நிரோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2006) வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,* N.பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற தபால்
*முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு.* அலுவலர், யாழ்ப்பாணம்). T.P: 2227275

யூனிவேர்சல்
(மா/இந்துமகளிர் கல்லூரி அருகில்)
A/L 2008 கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 20.05.2006 சனி 7a.m.
(50300)
A/L 2008 தமிழ் திரு.குழந்தை
ஆரம்பம்: 20.05.2006 சனி 8a.m.
A/L 2007 பொருளியல்
பேசினப் பொருளாதாரம்
ஆரம்பம்: 19.05.2006 வெள்ளி 5p.m.
By: விக்கி.

தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்
யாழ். நகரில்
மொபிற்றல் G.S.M. காட்-350/=
மொபிற்றல் G.S.M. காட் -1000/=
என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் தாரளமாப் பெற்றுக்கொள்ளலாம்.
more
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7310

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் - இணுவில்.
(இரு இடங்களிலும்)
சனி - ஞாயிறு வ்குப்புகள்
A/L 2007, A/L 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
அனைத்து வகுப்புக்களும் நாளையில் இருந்து நடைபெறும்.
குறிப்பு: A/L 2008 புதிய மாணவர்கள் நாளை 20.05.2006 உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.
(50306)

A/L CHEMISTRY
A/L 2007, 2008
புதிய பிரிவு ஆரம்பம்
By: E.RANJAN (B.Sc.)
ஆரம்பம்: 18.05.2006
ஐடியல் அக்கடமி, நிராவியடி, யாழ்ப்பாணம்.

COLLEGE OF CHEMISTRY
2008 by: DIAS
ஒட்சியேற்றமும் தாழ்த்தலும்
Sat, Sun 4.00
பழம் றோட், திருநெல்வேலி.

ஹப்பி மொபையில் HAPPY MOBILEE
(வடபகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)



இன்று முதல் எம்மிடம்
மொபிற்றல் G.S.M. காட் -350/=
மொபிற்றல் G.S.M. காட் -1000/=
என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் தாரளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
(கொள்வனவுக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்)
more Mobitel
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி
TEL.& Fax NO.: 021 2264460 H.P.No.: 0777 745394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.